
பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 18 ஞாயிற்றுக்கிழமை 01.06.2025 கதிர் 204

## இனி இது ரகசியம் அல்ல!



உள்ளூராட்சி சபைகளின் காலம் நாளை தொடங்குகின்றது. ஆட்சியமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையைஏதாவது ஒரு கட்சி பெற்றிருப்பின் ☞ 2

## சூதாட்டத்தை ஒழுங்குபடுத்த வருகிறது புதிய அதிகார சபை

### அதற்கான சட்டமூலம் வெளியீடு

பணச் சூதாட்டத்தினை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையை நிறுவுவதற்கான சட்டமூலமொன்றை ஆளும்தரப்பு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

அதற்கமைவாக,'2025ஆம்ஆண்டின் பணச்சூதாட்டத்தினை ஒழுங்குபடுத்தும் சட்டம்' என்ற சுருக்கப்பெயரைக் கொண்டிருக்கும்குறித்தசட்டமூலமானது, பணச்சூதாட்டத்தினை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையைத் நிறுவுவதற்காகவும், 44ஆம் அத்தியாயமான குதிரைப் பந்தய ஓட்டத்தின் மீது பந்தயம் பிடித்தல் கட்டளைச் சட்டத்தையும், 46ஆம் அத்தியாயமான சூதாட்ட கட்டளைச் சட்டத்தையும் 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தை நீக்குவதற்காக ஏற்பாடு செய்வதற்கும் அவற்றுடன் தொடர்பு பட்ட அலல்து இடைநேர்விளைவானகருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமான உள்ளடக்கத்தைக்கொண்டுள்ளது.

அத்துடன், இச்சட்டத்தின் ☞ 2

## சீரற்ற காலநிலையால் 4000 பேருக்குப் பாதிப்பு

நாட்டில் கடந்த ஒரு வாரமாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 13 மாவட்டங்களில் 4000க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டங்களில் கடும் காற்றுடனான மழை பெய்வதால் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதோடு, மின் கம்பங்களும் சாய்ந்துள்ளன. இதனால் கடந்த இரு தினங்களில் சுமார் 50 000க்கும் அதிகமான மின் தடை பதிவாகியுள்ளது.

புத்தளம், அம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரெலியா, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும்பதுளைஉள்ளிட்டமாவட்டங்களேஇவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில் 104 பிரதேச செயலகங்களில் 1214 குடும்பங்களைச் சேர்ந்த 4623 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ☞ 8

## சபை உறுப்பினர்களின் விவரங்களுடன் வர்த்தமானி வெளியீடு

உள்ளூராட்சிமன்ற தேர்தல் முடிவுகளின் பிரகாரம் 19 நிர்வாக மாவட்டங்களுக்குரிய உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளின் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை ☞ 2

## கொழும்பு மாநகர சபையின் மேயர் நாளை பதவியேற்பு

### ஆளும்தரப்பு அறிவிப்பு

கொழும்பு மாநகர சபையின் மேயராக விரெய் கெலி பல்தஸார் நாளைய தினம் பதவியேற்பார். மாநகர சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் ☞ 8

## உதய கம்மன்பிலவிற்கு ஆளும்தரப்பு எச்சரிக்கை

உதய கம்மன்பில உள்ளிட்டோரை பழைய ஆளும்தரப்புக்களைப் போன்று இந்த ஆளும்தரப்புடன் விளையாட முற்பட வேண்டாமெனஎச்சரிக்கின்றோம். அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் அவர்களே பொறுப்புக் கூறவேண்டும். அமைச்சர்கள்மீதுகுற்றச்சாட்டுக்கள் ☞ 8

## ஒரு கட்சியுடனும் ஒரு இணக்கமும் இல்லை ஜனநாயக்கக் கூட்டணி நேற்று திடீர் அறிவிப்பு

இலங்கை தமிழ் அரசுக் கட்சியானது நிபந்தனைகளின்றி தமக்கு ஆதரவினை வழங்குமாறு கோருவதால் எவ்விதமான இணக்கப்பாடுகளும்எட்டப்படவில்லை என்று ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவரும், பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கும்தமிழ்அரசுக்கட்சிக்கும் இடையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும்தமிழ்காங்கிரஸிற்கும் இடையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும்தமிழ்காங்கிரஸிற்கும் இடையில்பல்வேறுபட்ட பேச்சுக்கள் இடம்பெற்றன. இறுதி முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. ஆனாலும் ஒருங்கிணைந்து செல்வதற்குத் தயாராக இருப்பதாகக் கட்சிகள் குறிப்பிட்டிருக்கின்றன. ☞ 2

## தொகுதிக்கு ரூபா 80 லட்சம் ஆளும்தரப்புப் பேசிய பேரம்

### மத்துகம சபை சுயேச்சைக் குழு தகவல்

மத்துகம பிரதேச சபையில் ஆட்சியமைப்பதற்கான ஆதரவைக் கோரி தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு எமக்கு தொகுதிக்கு 80 இலட்சம் ரூபாவை வழங்குவதாகக் கூறியது. அது மாத்திரமின்றி பல அரசியல் ரீதியான பதவிகளுக்கும் உறுதிமொழி தரப்பட்டது, எனினும் நாம் அதற்கு இணாங்கவில்லை என மத்துகம தொகுதியில் வெற்றிபெற்ற சுயேச்சை குழு உறுப்பினர் கசுன் முனசிங்க தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற ☞ 8

## பிரதமர் பதவிக்கு பிமலை நியமிக்க லால் காந்த, ஹந்துனெத்தி எதிர்ப்பு

### உதய கம்மன்பில வெளியிடும் தகவல் இது

அமைச்சரவை மறுசீரமைப்பின் போது பிரதமர் பதவிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பெயரை மக்கள் விடுதலை முன்னணி பரிந்துரைத்துள்ளது. இதற்கு அமைச்சர்களான சுனில் ஹந்துனெத்தி மற்றும் லால் காந்த ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறதென பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து தனியார் ஊடகத்துடன் இடம்பெற்ற சந்திப்பொன்றில்இதனைத்தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் விடுதலை முன்னணிக்கும், தேசிய மக்கள்சக்திக்கும்இடையில் ☞ 2

## வெளிநாடுகளில் மருந்து வாங்க ஆளும்தரப்பிடம் சிறப்புத் திட்டம்

நாட்டுக்கு மருந்துகள் சரியான முறையில் விநியோகிப்பதை உறுதி படுத்த வெளிநாட்டு அரசுகளிடமிருந்து நேரடியாக ஆதரவைப்பெறுவதற்கான சிறப்புத்திட்டத்தைநடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய மருந்து விநியோகச் சங்கிலியில் இடையூறுகள் குறைக்கப்படும்வரை, பற்றாக்குறையான மருந்துகளைப் பெறுவதற்கு வெளிநாட்டு அரசுகளிடமிருந்து நேரடியாக உதவி பெற சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இது குறித்த பிரச்சினைகளை தெளிவுபடுத்தி சுகாதார அமைச்சினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை அங்கீகரிக்கும்போது ☞ 8

## விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட 15 அமைப்புகள் 217 தனிநபர்கள் மீதான தடை உத்தரவு நீடிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளிட்ட தடை செய்யப்பட்ட 15 அமைப்புக்கள் மற்றும் 217 தனிநபர்களின் பெயர் விவரங்களைக் குறிப்பிட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற எயா வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவினால் புதுப்பிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம், கனேடிய தமிழர் தேசிய அவை மற்றும் டி.வை. ஓ என அறியப்படும் தமிழ் இளைஞர் அமைப்பு ஆகியன இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எக்சியூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் ☞ 2

## காற்றால் சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்க ரூ. 10 மில்லியன்

பலத்த காற்றினால் சேதமடைந்த வீடுகளுக்காக இழப்பீடு வழங்க ஜனாதிபதியினால் 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்காக 25 இலட்சம் ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு மதிப்பீட்டின் அடிப்படையிலும் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயலாளர் கே.ஜீ.தர்மதிலக்கதெரிவித்தார்.

அனர்த்தங்களினால் உயிரிழந்த நபர்களுக்காக 10 இலட்சம் ரூபா நட்டயீடு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அனர்த்தங்களினால் ☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அந்தச் சபைகளின் பணிகள் நாளை தொடங்கும். அப்படியில்லாத சபைகளில் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சபைத் தலைவர் தெரிவுக்கான வாக்கெடுப்பை நடத்தி சபைகளைத் தொடக்கி வைக்கவேண்டும். அதற்கு ஆணையாளர் ஒவ்வொரு சபைகளுக்கும் திகதி குறிப்பிட்டு வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

ஒரு ஆணையாளரால் ஒரே நாளில் அதிகபட்சமாக இரண்டு அல்லது மூன்று சபைகளில் இவ்வாறு தெரிவை நடத்த முடியும். அப்படிப் பார்த்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும், அதிலும் தொங்கு சபைகள் அமையப்பெற்றுள்ள மாவட்டங்களில் சபைகளை அமைக்கும் பணிகள் முடிவுறுவதற்கே ஒரு வார காலத்திற்குக் குறையாத நாள்கள் செல்லும் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஒவ்வொரு சபையாக தெரிவு நடத்தி முடிக்கும் வரைக்கும் சபைகளுக்கு யாரைத் தவிசாளர், உப தவிசாளராகப் போடுவது என்பதை முடிவு செய்வதற்கு கட்சிகளுக்குச் சற்று அவகாசம் கிடைக்கும். தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில் இன்னமும் எந்த விடயமும் ஒப்பேறியதாகத் தெரியவில்லை. "வரும் ஆனால் வராது" என்கிற நகைச்சுவை போல சபைகளில் அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள கட்சி ஆட்சியமைக்க ஆதரவு என்று எல்லா தமிழ்க் கட்சிகளும் அறிவித்தாலும், அதில் அவை அர்ப்பணிப்புடன் இருக்கின்றன என்று சொல்லவிட முடியாது. தாம் கேட்ட சபைகளைத் தமக்குத் தரவில்லை என்பதால் தமிழ் அரசுக் கட்சிக்குத் தமது ஆதரவு தரப்படும் என்பதை உறுதியாகச் சொல்லமுடியாது என்கிற பாணியில் நேற்று சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தமிழ் காங்கிரஸூம் ஆதரவு ஆனால், கொள்கை இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்று கூறியிருக்கிறது. ஆக மொத்தத்தில் எப்போது வேண்டுமானாலும் இது பிரச்சினையாக வெடிக்கலாம் ஒருவர் காலை ஒருவர் வாரலாம். அதனால் 'கிளைமாக்ஸ்' காட்சிகளுக்காகத் தமிழ் மக்கள் அனைவரையும் ஆர்வத்துடன் காத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

............................

ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு இன்னும் சில விடயங்களில் சரியான புரிதல்கள் இல்லைப் போலுள்ளது. நேற்று இந்தியாவில் நடந்து முடிந்த உலக அழகிப் போட்டியின் இறுதிச் சுற்றில் பங்கேற்றிருந்த இலங்கையின் அழகி அனுதி குணசேகர இந்தப் போட்டியில் வெற்றி பெற அவர் வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

தனது எக்ஸ் பக்கத்தில் அநுர வெளியிட்ட குறிப்பில், 72வது உலக அழகி இறுதிப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய திருமதி அனுதிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்வதேச அரங்கில் நமது நாட்டையும் மக்களையும் அழகாகப் பிரதிநிதித்துவப்படுத்தி, அவர் ஏற்கனவே தனது நாட்டைப் பெருமைப்படுத்தியுள்ளார். அவரது இன்றைய வெற்றிக்கு எமது வாழ்த்துக்கள் என்று தெரிவித்திருந்தார்.

சோகம் என்வென்றால் அநுர வாழ்த்திய அநுதிக்கு நடுவர்கள் முதல் மூன்று இடங்களில் ஒன்றைக்கூட வழங்கவில்லை என்பதுதான். இலங்கைக்கு உலக அழகிப் பட்டத்தைவிட உலகத் திருமதிகள் பட்டங்கள்தான் அதிகம் கிடைத்திருக்கின்றன என்பது ஜனாதிபதிக்குத் தெரியாமல் போனமை துரதிர்ஸ்டம்தான். இலங்கை அழகிகள் திருமணத்தின் பின்னர்தான் உலகத்திற்கு மேலும் அழகானவர்களாகத் தெரிகிறார்கள் என்கிற உண்மையை ஜனாதிபதிக்கு எடுத்துச் சொல்லாமல் போன அவரது உதவியாளர்களுக்குப் பலத்த கண்டனங்கள்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஒரு கட்சியுடனும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்களும் அவ்வாறுதான் குறிப்பிட்டிருக்கின்றோம்.

கொள்கை ரீதியாக உடன்பாட்டுக்கு வருவதற்காக அதுசார்ந்த கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றன. தமிழ் அரசுக கட்சியை பொறுத்தவரை அதனுடைய தலைவராக இருக்கும் சிவஞானம், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது, குறைந்தபட்சம்கூட எந்தவொரு இடத்தையும் விட்டுகொடுக்க முடியாது, எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி ஆதரவு தெரிவிக்க வேண்டும். மாற்றீடாக எதுவும் செய்ய முடியாது என்ற கருத்தை ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் கூறியுள்ளார். அவர்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான நியாயங்களும் இல்லாமல், அவர்கள் கேட்கின்ற ஆதரவுகளை கொடுத்தால் அவர்களுக்கு போதுமானது என்ற கருத்தை தான் அவர்கள் பிரதிபலிக்கின்றார்கள்.

அதேசமயம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பது கூட்டாகச் செயல்படுவதற்குத் தயாராக இருக்கின்றது, அது தொடர்பான கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்கவேண்டும் என்றும் கூறியிருக்கின்றது. அந்தக் கொள்கை ரீதியான விடயங்களை நாங்கள் அவர்களுடன் பேசிருக்கின்றோம்.

பேச்சுக்கள் இதுவரை முற்றுப் பெறவில்லை. அந்த பேச்சுக்கள் அடுத்த ஓரிரு நாட்களுக்குள் முடிவுக்கு வந்து அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கான நிலவரங்கள் தோன்றுமென நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஒரு தெளிவான முடிவுகளுடன் இந்த சபைகள் அமைக்கப்படுமென நாங்கள் எண்ணுகின்றோம் என்றார்.

## சூதாட்டத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் 1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையினாலும், 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய லொத்தர்கள் சபையினாலும் நடத்தப்பட்ட லொத்தர்கள் மற்றும் சமூப் பணச் சூதாட்டம் தவிர எல்லா வகையான பணச்சூதாட்டங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த அதிகாரசபையானது, சிறுவர்களை பணச்சூதாட்டத்திலிருந்து பாதுகாத்தல், பணச்சூதாட்டத்துடனான குற்றச்செயல்களின் வரும்படிகளை தூய்தாக்கல் செய்யப்படுவதை தடுத்தல், அமைதி குலைவின் மூலமொன்றாக பணச்சூதாட்டம் இருப்பதைத் தடுத்தல், சமூகத்தீங்கைக் குறைத்தல், சட்டமுறையற்ற செயற்பாடுகளைத் தடுத்தல், பொறுப்புள்ள பணச்சூதாட்டத்தினை வளர்த்தல், சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான வசதிகளை வழங்குதல், நேர்மை நியாயத்தன்மையை உறுதிப்படுத்தல், வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்படுதலை உறுதி செய்தல், பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தல், பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல், நல்லாட்சியை உறுதிப்படுத்தல், அரசிறைச் சேமிப்பை ஒழுங்குபடுத்தல் ஆகியவை நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

## சபை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றுக்கான உறுப்பினர் நியமனத்தை உறுதிப்படுத்தி தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித்துள்ளது.

(262ஆம் பிரிவு) உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் வாக்கெடுப்பு கட்டளைச் சட்டத்தின் 66 (2) அத்தியாயத்தின் கீழ் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று சனிக்கிழமை பிரசுரித்துள்ளது.

பிரசுரிக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் 'நிர்வாக மாவட்டத்தில் உள்ள, ஒவ்வொரு தொகுதிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய பொலன்னறுவை, குருநாகல், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, நுவரெலியா, மாத்தளை, கண்டி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு ஆகிய நிர்வாக மாவட்டங்களின் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக்கான உறுப்பினர் நியமனத்தை அத்தாட்சிப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்கெடுப்பு கடந்த மே மாதம் 06 ஆம் திகதி நடைபெற்றது. பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு 2424/02 ஆம் இலக்கத்தின் கீழ் 2025.02.17 ஆம் திகதி பிரசுரித்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளது

தேர்தல் முடிவுகள் வெளியாகி 21 நாட்களுக்குள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் மேலதிக உறுப்பினர் பட்டியல் மற்றும் பெண் பிரதிநிதித்துவ பட்டியல் தொடர்பான விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் குறித்த காலப்பகுதிக்குள் பெயர் பட்டியல் விபரங்களை சமர்ப்பிக்கவில்லை.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்களை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிப்பதை விரைவுப்படுத்துவதை கருத்திற் கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்) 76 ஆம் பிரிவின் கீழான கட்டளையின் பிரகாரம் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பெயர் பட்டியல் விபரங்களை 2025.05.30 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு கடந்த மாதம் 27 ஆம் திகதி அறிவித்திருந்தது.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளூராட்சி மன்றங்களில் பதவி பிரமாணம் செய்துக் கொள்ள முடியும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கான மேயர் மற்றும் பிரதி மேயர், தலைவர் ஆகிய பதவிகளுக்கான நியமனங்கள் ஒருவாரத்துக்குள் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## 15 அமைப்புகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு, தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாதே மிலாதே இப்ராஹிம், விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்துபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ளஸ் ஆகியனவும் இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் காரணமாகக் குறித்த அமைப்புகள் தடைசெய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறப்பட்ட அமைப்புக்கள் சார்ந்த நிதியங்கள், அவற்றின் சொத்துக்களும் முடக்கப்படுவதாகவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாடுகள் ஏதுமில்லை ஆகவே அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கான அவசியம் கிடையாது என்று கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ளது. இந்த ஆறுமாத பயிற்சியை அடிப்படையாகக்கொண்டு அமைச்சரவையை கூட்டு விருப்பத்துடன் மறுசீரமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க சபைமுதல்வராக நாடாளுமன்றத்தில் செயற்படும் விதம் குறித்து எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல நாடாளுமன்ற உயர் அதிகாரிகளும் அதிருப்தி வெளிப்படுத்தியுள்ளார். தான்தோன்றித்தனமான முறையில் செயற்படுவது சபை முதல்வர் பதவிக்கு அழகல்ல, மக்கள் விடுதலை முன்னணிக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் பனிப்போர் தீவிரமடைந்துள்ளது. இந்த அரசாங்கத்தில் தேசிய மக்கள் சக்தியினர் ஆதிக்கம் கொண்டுள்ளதை மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்;ட உறுப்பினர்கள் எதிர்த்து வருகிறார்கள்.

இவ்வாறான பின்னணியில் தான் அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து அவதானம் செலுத்தப்பட்டு, பிரதமர் பதவிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சர்களான சுனில் ஹந்துனெத்தி

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத 30 சபைகளுக்கு தவிசாளர் தெரிவு ஜுன் 15இற்கு பின்பு

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அஸ்மி கூறுகின்றார்

(சகாதேவராஜா)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத 30 சபைகளுக்கான தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவுக்கூட்டங்கள் பெரும்பாலும் ஜுன் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்பு நடைபெறும்.

இவ்வாறு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏஎல்எம்.அஸ்மி தெரிவித்தார் .

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் முதலாவது அமர்வு மற்றும் தெரிவுக் கூட்டங்கள் தொடர்பாக கேட்ட பொழுது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணத்தில் 45 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. அவற்றில் கல்முனை மாநகர சபை தவிர்ந்த 44 சபைகளுக்கு அண்மையில் தேர்தல் இடம்பெற்றது.

தெரிவான உறுப்பினர்களுக்கான உறுப்புரிமை வர்த்தமானி அறிவித்தலின்படி ஜுன் மாதம் 02 ஆம் திகதி கிடைக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் 50 வீதமான உறுப்பினர்கள் அல்லது 50 வீதத்துக்கு கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டு இருக்கின்ற 14 சபைகளின் மேயர்



அல்லது தவிசாளர் சுயாதீனமாக கூட்டங்களை ஆரம்பிக்கலாம். அந்தந்த சபைகளின் செயலாளர் மற்றும் மேயர் அல்லது தவிசாளர் இணைந்து நான்கு நாள்கள் (04) வேலை நாள்கள் வரக்கூடியவாறு வைத்து உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்து முதலாவது அமர்வை நடத்த வேண்டும். அந்த வகையில் ஜுன் மாதம் 2 ஆம் திகதி முதலாவது அமர்வு நடாத்துவது சாத்தியமல்ல.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் போதுமான அறுதிப் பெரும்பான்மை இல்லாமல் தொங்கு நிலையில் 30 சபைகள் உள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 12 சபைகளும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் தலா 09 சபைகளும் இவ்விதம் உள்ளன.

அச் சபைகளுக்கான தவிசாளர் உப தவிசாளர் தெரிவானது எனது தலைமையில் அந்தந்த சபைகளில் நடைபெறும்.

இக் கூட்டங்கள் பெரும்பாலும் ஜுன் மாதம் 15 ஆம் திகதிக்கு பிற்பாடு இடம் பெற சாத்தியக்கூறு உள்ளது.

ஏனெனில் 30 சபைகளுக்குமான தெரிவுக்கூட்டத் திகதிகள் குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தல் மும்மொழியிலும் செய்யப்பட வேண்டும்.

மேலும் 7 நாள்களுக்கு முன்பதாக அந்த அழைப்பு விடுக்கப்பட வேண்டும் .

இப்படியான காரணங்களால் பெரும்பாலும் ஜுன் மாதம் 15 ஆம் தேதிக்கு பிற்பாடு தான் இந்த 30 சபைகளுக்குமான கூட்டங்கள் நடைபெறும்.

குறைந்தது இக் கூட்டங்கள் நடத்த 15 நாள்கள் தேவைப்படும்.

# புத்தளம் வேப்பமடு பாடசாலையில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்

(சியாஜ்)

கல்வி உயர் கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சால் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தி வரும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்ட குழுவின் வேண்டுகோளுக்கு அமைய புத்தளம் வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை பாடசாலையின் உப அதிபர் எம் எம் நியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

'செயல்களை முன்னெடுப்போம்-பொறுப்புடன் செயற்படுவோம்', 'சூழல் நேய பாடசாலைகளிலிருந்து எதிர்கால பசுமைத் துதலைவர்கள்', 'பல்வகைமையை மதிக்கின்ற மகிழ்ச்சிக்குரிய வகுப்பறை', 'செயல்களில் நியாயத்தன்மை மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திலும் வெளிப்படைத்தன்மை மூலம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்' ஆகிய தலைப்புக்களில் புத்தளம் வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்தோடு போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு பாடசாலையின் பழைய மாணவர்களான 1994 ஆம் ஆண்டு மாணவர்களால்



பெறுமதியான சான்றிதழ்களும் அன்பளிப்பு செய்யப்பட்டது.

மேற்படி சான்றிதழ் புத்தளம் வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க செயலாளர் டப்யூ.எம் .ஐஸீலினால் பாடசாலை நிர்வாகத்தினிடம் கையளிக்கப்பட்டது 2025.05.30 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்ட போது இதன்போது உப அதிபர் எம்.எம்.நியாஸ், பிரதி அதிபர் எச்.நஸ்ருதீன், பகுதித் தலைவர்களான பாரூக்பதீன், எம்.எம்.றிபாஸ் ஆசிரியர்களான எம்.எஸ்.எஸ்.மௌபியா, எஸ்.எம்.பீமுஹிபுர் நிஸா ஆகியோர் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச இடப்பெயர்வு அமைப்பு பொறுப்பாளருடன் செந்தில் சந்திப்பு!

(நூருல்ஹுதா உமர்)

கொழும்பில் சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு, பொறுப்பாளர் கிறிஸ்டின் பிபார்கோவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான செந்தில் தொண்டமான் சந்தித்தார்.




சமீபத்தில் தோட்ட இளைஞர்கள் இடம்பெயர்வின் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அவர்கள் இடம்பெயரும் போது தேவையான உதவிகளை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிறிஸ்டின் பிபார்கோவிடம் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# பெரியநீலாவணையில் பெண் அடித்துகொலை

(ஷினாஸ்)





அம்பாறை மாவட்டம் கல்முனை - பெரியநீலாவணை கிராமத்தில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் அடித்து தாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

பெரியநீலாவணை நீலாவணன் வீதியில் வசிக்கும் குறித்த பெண் அவரது வீட்டில் அடித்து படுகொலை செய்யப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை மதியம் சடலமாக மீட்கப்பட்டார்.

கொலை செய்யப்பட்டவர் இரண்டு பிள்ளைகளின் தாயான திருமதி மனோதர்ஷன் விதுஷா (வயது 38) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

சம்பவம் நடைபெற்ற தினமான வெள்ளிக்கிழமை காலை தனது இரு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பி விட்டு வீட்டில் தனிமையில் இருக்கும் போதே இந்தக் கொலை சம்பவம் நடைபெற்றுள்ளது.

கொலைசெய்யப்பட்டவரின் கணவர் தொழில் நிமித்தம் கட்டார்நாட்டில் பணிபுரிவதுடன், இவர் தனது அப்பா மற்றும் இரு பிள்ளைகளுடன் (ஒருவர் சாதரணதரம் மற்றையவர் தரம் -10) வாழ்ந்து வந்துள்ளார். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று அப்பா மத்திய முகாம் பகுதிக்கு தனது டயர் கடைக்கு சென்றதாகவும் பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலைசம்பவம் தொடர்பில் அம்பாறை குற்றத் தடுப்பு பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மோப்பநாய் உதவிகளுடன் சந்தேக நபர்கள், தடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை சம்பவம் நடைபெற்ற வீட்டில் இருந்த சி.சி.டிவி கேமராவின் உதிரிபாகங்களையும் கொலை சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எடுத்துச்சென்றுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு வருகை தந்த கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அம்பாறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த கொலைச்சம்பவம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் விரிவான விசாரணைகளை அம்பாறை குற்றத்தடுப்பு பொலிஸார் பெரியநீலாவணை பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய தலைமையின் 100 நாள் திட்டம்

அநுரகுமார திஸாநாயக்க அரசுத் தலைவராக பதவியேற்ற பிறகு, மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த நம்பிக்கையின் முதற் கட்ட சோதனையாகவே '100 நாள் திட்டம்' பார்க்கப்படுகின்றது. ஊழலற்ற ஆட்சி, பொதுத்தொகை குறைவான வாழ்க்கைச் செலவுகள், சுதந்திரமான நிர்வாகம், சமூக நீதியுடனான அபிவிருத்தி என்பன இத்திட்டத்தின் மைய நோக்குகளாக அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது, அந்த திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் எவ்வளவு உறுதியாக உள்ளது, எவ்வளவு பாதையை விட்டுப் பிழைக்கத் தொடங்கியிருக்கிறது என்பதே மக்கள் மத்தியில் எழும் முக்கியமான கேள்வியாக உள்ளது.

முன்னாள் ஆட்சிக்கான மாற்றத்தை வலியுறுத்தி, பொதுமக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் அதிகாரத்தை மாற்றினார்கள். அதனடிப்படையில், புதிய தலைவர் தனது நிர்வாகத்தை 'மாற்றத்தின் ஆட்சி' என விளம்பரப்படுத்தினார். ஆனால், சில அரசியல் நியமனங்கள், முக்கிய பதவிகளில் பழைய அரசியல் உடன்பாடுகளின் தாக்கங்கள், மற்றும் யாரையும் விசாரணைக்கு உட்படுத்தாமை போன்ற விடயங்கள், பழைய அரசியல் பண்புகளே தொடரப்படுகின்றன என்ற ஐயத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன.

100 நாள் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்களில், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்ட திருத்தம், ஊழலுக்கு எதிராக விசாரணை அதிகாரங்களை வலுப்படுத்துவது, மக்களின் அடிப்படை வாழ்வாதாரச் செலவுகளை குறைக்கும் திட்டங்கள், மற்றும் கல்வி, சுகாதார துறையில் அவசர உதவித் திட்டங்கள் உள்ளன. ஆனால் இவை அனைத்தும் தற்போது அறிக்கைகளிலும், அரசியல் உரைகளிலும் மட்டுமே காணப்படுகின்றன. நடைமுறையில் கண்காணிக்கக்கூடிய மாற்றங்கள் மிகக் குறைவாகவே உள்ளது.

அரசுத் தலைவர் பதவியைப் பெற்ற அநுரகுமாரவின் தன்மையானது, இவர் ஒரு பல ஆண்டுகள் எதிரணிப் பேச்சாளர், பொதுப் புரட்சி வழிகாட்டி என்பதிலிருந்தும், தற்போதைய ஆட்சி செயற்பாடுகளால் அவரது அடையாளமே மங்கிவிடும் அபாயமும் உருவாகின்றது. தனிப்பட்ட நேர்மையை மேலோங்கி, நிர்வாகத்தில் கடுமையான மாற்றத்தை உறுதிப்படுத்தும் பாணி இருக்கவேண்டும் என்பது நம்பிக்கை.

மத்திய அரசின் நிர்வாகத்தில் ஆளும்தரப்பில் நிலவும் கருத்து வேறுபாடுகள், அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படாத நிலை, மற்றும் பொதுமக்கள் எதிர்பார்ப்புகளைச் சீராக முன்னெடுக்க முடியாமல் திணறும் பிம்பம், 100 நாள் திட்டத்திற்குத் திடமான பாதையை உருவாக்காதிருப்பதையும் உணர்த்துகின்றது.

எனவே, தற்போது அவசியமானது இந்த 100 நாள் திட்டம் வெறும் அறிக்கையாக அல்ல, மனித வாழ்க்கையைத் தொடும் மாறுபாடுகளுடன் செயல்படுத்தப்படவேண்டும் என்பதேயாகும். அந்த வகையில் மக்கள் எதிர்பார்ப்பு மிகுந்த நிலையில், புதிய அரசுத் தலைவர் தனது அரசியல் விடுதலையை நிரூபிக்க வேண்டிய நேரம் இது. 100 நாள் ஒரு நம்பிக்கையின் ஆரம்பமாக இருக்க வேண்டுமேயன்றி, ஒரு புதிய ஏமாற்றத்தின் தொடக்கமாக மாறக்கூடாது.

## இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்திற்கும் பிரதி அமைச்சருக்கும் இடையில் பேச்சு

### 11 அம்சக் கோரிக்கைகள் முன்வைப்பு

(அஷ்ரப்கான்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ ஆகியோருக்கிடையிலான தொழில் சங்க பேச்சு கடந்த 28 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலக ஒருங்கிணைப்பு குழு தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையிலான சங்கத்தின் உயர் மட்ட குழுவினர் பங்கு கொண்ட இப்பேச்சில், 11 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எஸ். லோகநாதன் உரையாற்றினார்.

பின்வரும் கோரிக்கைகள் இங்கு முன்மொழியப்பட்டன.

1. கிழக்குமாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள பாராமரிப்பு ஊழியர்களை சேவையில் உறுதிப்படுத்தலும் பதவியுயர்வும்.

2. கடந்த இரு வருடங்களுக்கு மேல் அரச சேவை மற்றும் மாகாண அரச சேவையில் கடமையாற்றும் வெளிவாரிப்பட்டதாரி உத்தியோகத்தர்களின் பட்டதாரி சேவைக்கு உள்வாங்கி எம்.என்-3 ற்கு பதவி உயர்வு செய்தல்

3. கடந்த 5 வருடங்களுக்கு மேல் நிவாரண அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு புதிய நிர்வாக சுற்றறிக்கையை வெளியிடுமாறு கோருதல்.

4. அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விழா முற்பணல் கொடுப்பனவை குபா. 10,000 இல் இருந்து 25,000 ரூபாவாக உயர்த்துதல்.

5. வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்தல்.

6. கிழக்குமாகாண சபையின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கோரிக்கைகள் தொடர்பாக ஆளுனருடன் பேச்சு நடத்தி நடைமுறைபப்படுத்துதல்.

7. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு இலங்கை நிர்வாக சேவை தரம் 1 இல் உள்ள சிங்கள அதிகாரி ஒருவரை நியமித்தல்.

8. கல்முனை மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் ஒருவரை நியமித்தல்.

9. கல்முனை கிட்டங்கி பாலத்தில் வெள்ள காலத்தில் உயிரிழப்பு ஏற்படுவதால் புதிய பாலம் ஒன்றை அமைத்தல்.

10. கடந்த 06 வருடகாலமாக கடமையாற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்தல்.

11. அரச நிருவாக சுற்றறிக்கை 10ஃ2000 இற்கு அமைவாக மாகாண அமைச்சுக்களின் ஆலோசனை சபைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

மேற்படி கோரிக்கைகள் தொடர்பாக பிரதி அமைச்சருடன் நடைபெற்ற பேச்சின்போது இக்கோரிக்கைகளை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும், மாகாண சபைக்குரிய கோரிக்கைகளை ஆளுனருடன் பேச்சு நடத்தி நடைமுறைப்படுத்துவதாகவும் கிராமிய அபிருத்தி சமூக வலுவூட்டல் மற்றும் சமூக பாதுகாப்பு பிரதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.



## உழ்ஹிய்யாவுக்கு விலங்குகளை அறுக்க மாநகர சபையின் அனுமதி மிக அவசியம்

(சியாஜ்)

எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாளுக்காக உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்ற ஆடு, மாடுகளை அறுப்பதற்கு எண்ணியுள்ளவர்கள் மாநகர சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

03.06.2025 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபைக்கு சமுகமளித்து அனுமதிகளை பெற்றுக்கொள்ளுமாறும், அனுமதியின்றி உழ்ஹிய்யா நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போதுஏற்படுகின்ற சட்ட பிரச்சினைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இறைச்சிக்கழிவுகளை பாதைகள், பொது இடங்களில் வீசுவதை முற்றாக தவிர்த்து புத்தளம் மாநகர சபையினால் கழிவுகளை போடுவதற்காக புத்தளம் நெடுங்குளம் மைதானத்துக்கு அருகிலும், மாநகர சபை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திலும் வெட்டப்பட்டுள்ள பிரத்தியேக குழிகளிலும், ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள ட்ராக்டர் வண்டிகளிலும் கழிவுகளை போடுமாறும் மாநகர சபையின் செயலாளர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.






# சீரற்ற காலநிலையினால் வீடுகள் கடும்சேதம் மின்சாரம் துண்டிப்பு; போக்குவரத்து பாதிப்பு

(கிஷாந்தன்)

ஹற்றன் பகுதியில் வெள்ளிக்கிழமை வீசிய பலத்த காற்றினால், ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ருவான்புர பொலனி, ஹற்றன் குடாகம, ஹற்றன் சித்தார தோட்டம் மற்றும் டிக்கோயா பகுதிகளில் உள்ள பல வீடுகளின் கூரைகள் முழுமையாகவும், பகுதியளவிலும் அள்ளுண்டு சென்றுள்ளன எனவும், அந்தப் பகுதிகளில் உயர் மின்னழுத்த மின் கம்பிகள் மற்றும் மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன எனவும் ஹற்றன் தலைமையக பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸார் ரஞ்சித் ஜெயசேன தெரிவித்தார்.

மேற்படி வீடுகளில் வசிப்பவர்கள் தற்காலிகமாக தங்கள் உறவினர்களின் வீடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர், மேலும் மத்திய மலைநாட்டில் கடுமையான சீரற்ற வானிலை தொடர்ந்தும் நிலவி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வீசிய பலத்த காற்று காரணமாக, ஹற்றன் பகுதி முழுவதும் உயர் மின்னழுத்த மின் கம்பிகள் மற்றும் மின் கம்பங்கள் அறுந்து விழுந்துள்ளன எனவும், மின் தடையை சரிசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஹற்றன் மின்சார சபையின் மின்சார கண்காணிப்பாளர் நிமல் சமரகோன் தெரிவித்தார்.

இதேவேளை, நோர்டன்பிரிட்ஜில் உள்ள விமலசுரேந்திர நீர்மின் நிலையத்திற்கு செல்லும் வீதியில் வெள்ளி இரவு ஒரு பெரிய மரம் விழுந்ததால், மறுநாள் அதிகாலை வரை வீதியின் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்தது.

நோர்டன் பிரிட்ஜ் பகுதியில் வீசிய பலத்த காற்றின் போது குறித்த மரம் விழுந்ததாக நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே நேரத்தில், ஹற்றனில் இருந்து தலவாக்கலை வரை செல்லும் உயர் மின்னழுத்த மின்கம்பி அமைப்பு வெள்ளி இரவு சரிந்து விழுந்ததால், கொட்டகலை மற்றும் தலவாக்கலை பகுதிகளுக்கு மின்சாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

# ஆயுர்வேத மருந்துகளின் உற்பத்திகளை ஊக்குவிக்க சமூக மூலிகைத் தோட்டம்

( பாறுக் ஷிஹான்)

இலங்கையில் ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்வதற்குரிய மூலிகைகள் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

குறிப்பாக இந்தியா, நைஜீரியா, ஈரான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து பெரும்பாலான மூலிகைகளைப் பெற்று குறித்த மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்காக பெருமளவிலான நிதிகளை அரசாங்கம் செலவிட்டு வருகிறது.

இதற்காக செலவிடப்படும் செலவீனங்களை குறைத்து உள்நாட்டில் தொழில் வாய்ப்பினை ஊக்குவித்து பாரிய திட்டமிடல்களுடன் ஆயுர்வேத மருந்துகளை உள்நாட்டிலே உற்பத்தி செய்வதற்கு சுதேச மருத்துவத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க சுதேச மருத்துவத் திணைக்களம் நாடு தழுவிய ரீதியில் சமூக மூலிகைத் தோட்டங்களை நிறுவுவதற்குரிய பாரிய வேலைத்திட்டமொன்றினை முன்னெடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தினை கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்துவதற்கு போதுமான வளங்கள் இருப்பதால் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மூலிகைத் தோட்டங்களை அமைப்பதற்குரிய ஆரம்பக்கட்டப் பணிகளை சுதேச மருத்துவத் திணைக்களம் முன்னெடுத்து வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் குறித்த திட்டத்தினை செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் உயரதிகாரிகள், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியர்கள், ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.








கிழக்கு மாகாணத்தில் பொருத்தமான இடங்களில் மூலிகைத் தோட்டங்களை அமைப்பது தொடர்பாகவும் சிறு பண்ணையாளர்களையும் தோட்ட செய்கையாளர்களையும் இதன்பால் ஊக்குவித்து அவர்களிடமிருந்து மூலிகைகளைப் பெற்று மருந்துகளை உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.



# கண்டாவளை வைத்தியசாலையை தரமுயர்த்தி தருமாறு கோரிக்கை





கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் உள்ள தருமபுரம் வைத்தியசாலையில் போதிய அளவிலான புதிய கட்டடங்கள் வசதிகள் இருந்த போதிலும் மக்களுக்கான சிகிச்சை முழுமையாக பெற முடியாத நிலையில் உள்ளதாக நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தர்மபுர வைத்தியசாலையை நம்பி இருபத்தி ஒரு கிராமங்களுக்கு அதிகமான மக்கள் தமது வைத்திய சேவையினை தருமபுர வைத்தியசாலையிலேயே பெற்று வருகின்றனர். இருப்பினும் தருமபுர வைத்தியசாலையில் ஒரே ஒரு வைத்தியரே நாளாந்தம் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் ஒருநாள் பொழுதை வைத்தியசாலையிலேயே கழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இருக்கின்ற ஒரு வைத்தியரும் நோயாளர்கள் நாளாந்தம் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் கிளினிக் நோயாளர்கள் அவசர சிகிச்சைக்குவரும் நோயாளர்கள் அனைவரையும் தற்பொழுது இங்கே கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஒரு வைத்தியரே தற்பொழுது கடமையாற்றி வருகின்றார். கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் தற்பொழுது இங்கி வரும் தருமபுர வைத்தியசாலையில் மகப்பேற்று வசதி, குருதி பரிசோதனை, அவசர சிகிச்சை பிரிவு என பல சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தன.

தற்பொழுது ஒரு குருதி பரிசோதனை செய்வதாயின் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தருமபுர வைத்தியசாலையை தரம் உயர்த்தி சிறந்த சிகிச்சை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதியில் வாழும் மக்கள் சார்பாக வேண்டி நிற்கின்றோம் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். 316

# தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினரை சந்தித்த சமூக நீதிக்கட்சி பிரதிநிதிகள்

(சியாஜ்)



இலங்கைக்கு வருகை தந்துள்ள தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளருமான ஆளூநர் ஷா நவாஸை சமூக நீதிக் கட்சியின் பிரதிநிதிகள் வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்தனர்.

இதன்போது சமகால இலங்கை - இந்திய அரசியல் நிலைவரங்கள் குறித்தும், இரு நாடுகளிலும் சிறுபான்மை சமூகங்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சமூகநீதிக்கட்சியைபிரதிநிதித்துவப்படுத்தி கட்சியின் தலைவர் அர்க்கம் முனீர், தேசிய அமைப்பாளர் இர்பான் அஹமத், ஊடக செயலாளர் அன்ஷாக் அஹமத் மற்றும் சட்டத்தரணி இல்ஹாம் ஹஸனலி ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.




# மெல்பேர்ணில் அக்கினிக்குஞ்சு வாழ்நாள் சாதனையாளர் விருது



மெல்பேர்ணில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இசையருவிபாடல்போட்டியும், அக்கினிக்குஞ்சு இணையத் தளத்தின் பதினைந்தாவது ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

அக்கினிக்குஞ்சு இணையத்தளத்தின் பதினைந்தாவது ஆண்டுவிழாவில் இசையருவி பாடல் போட்டி, உள்ளூர் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களை கௌரவித்தல், இசையருவிஇசைநிகழ்ச்சியுடன் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.

கடந்த பதினைந்து வருடங்களாக அக்கினிக்குஞ்சு மின்னிதழாக தொடர்ந்து வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் வருடம் மெல்பேர்ணில் நடைபெற்ற நிகழ்வில் பல இலக்கிய அறிஞர்களுக்கும் , இசை கலைஞர்களுக்கும் வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் எஸ்.பொ நினைவு விருதை மூத்த எழுத்தாளர் லெ முருகபூபதியும், கவிஞர் அம்பி நினைவு விருதை மகாதேவ ஐயர் ஜெயராயசர்மா அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

ஆஸ்திரேலியாவில் தமிழ் இலக்கியத்திற்கான வாழ் நாள் சாதனையாளர் விருதினை எழுத்தாளர் கிறிஸ்டி நல்லரெத்தினம், எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா, சட்டத்தரணி சந்திரிகா சுப்ரமணியம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் வானொலி ஒலிபரப்புப் பணிக்காக எட்வேட் அருள்நேசதாசன், ரமேஷ் பாலகிருஷ்ணர் ஆகியோர் வாழ் நாள் சாதனையாளர் விருதினை பெற்றுக் கொண்டனர்.

மேலும் இசைப் பணிக்காக ரொகான் அலோசியஸ், ரவீந்திரன் சதீஸ்குமார், இரமா சிவராஜா, சுமதி சத்தியமூர்த்தி ஆகியோர் வாழ் நாள் சாதனையாளர் விருதினை பெற்றுக்கொண்டனர்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன், அதை அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன், வெந்து தணிந்தது காடு, தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ? என முழங்கிய மகாகவி பாரதியாரின் சொல்லின் வீரியத்தை ஆஸ்திரேலிய மண்ணில் கடந்த பதினைந்து வருடங்களாக 'அக்கினிக் குஞ்சு' இணைய தளத்தை செவ்வனே நடாத்தி வரும் யாழ்.பாஸ்கரின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அக்கினிக்குஞ்சு 1990 களில் ஆஸ்திரேலியாவில் இருந்து மாதாந்தம் அச்சில் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியராக யாழ் பாஸ்கர் நீண்ட காலமாக செயற்பட்டு வந்தார். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் கலாசார சஞ்சிகை என அறிவித்து அனைத்து வகையான படைப்புக்களையும் தாங்கி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.








# உகந்தைமலையில் புத்தர் சிலையில்லை

## கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீமுருகன் ஆலயத்திற்குச் சொந்தமான ஏழு ஏக்கர் பரப்பினுள் எந்தவொரு புத்தர் சிலையும் வைக்கப்படவில்லை. யாரும் அலட்டிக் கொள்ள தேவையில்லை என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

உகந்தமலை புத்தர் சிலை விவகாரம் ஊடகங்களில் வைரலாக எரிந்து வருகையில், இதுவரை மௌனம் சாதித்து வந்த அந்த மாவட்டத்திற்குரிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், முதல் தடவையாக வாய்திறந்திருக்கிறார்.

அவரிடம் இவ்விவகாரம் பற்றி கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த விடயம் எனக்கு மக்களால் தெரிவிக்கப்பட்டது. இது உணர்வுபூர்வமான விடயம். கவனமாக கையாள வேண்டும் என்பதற்காக இதுவரை நான் ஒரு கருத்தும் கூறவில்லை.

இன்று நான் அங்கு நேரடியாக சென்றேன்.

அங்கு ஆலய குருக்கள் முதல் வண்ணக்கர் வரை சந்தித்து கலந்துரையாடினேன்.

விளக்கம் கிடைத்தது. அதாவது குறித்த சிலை உகந்தமலை சூழலில் வைக்கப்படவில்லை என்பது.

மாறாக, உகந்தமலைக்கு அப்பால் கடற்கரைச்சூழலில் உள்ள மலையொன்றில் புத்தர்சிலை நிறுவப்பட்டு உள்ளது. அது அண்மையில் நிறுவப்படவில்லை. பல மாதங்களுக்கு முன்பே நிறுவப்பட்டது. அப்போது இந்த அறிக்கை வெளியிடும்



சமூக செயற்பாட்டாளர்கள் எங்கே? இருந்தார்களோ தெரியாது. நிற்க, அதனோடு ஒட்டியதாக பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது என்பதை நேரடியாக அறிந்தேன்.

வருடாந்தம் முருகப் பெருமான் தீர்த்தமாடுகின்ற கடற்கரைச் சூழலில் கடற்படை முகாமுக்கு அருகே அமைக்கப்பட்டுள்ளது. அச் சூழலில் மீன்வாடிகளும் உள்ளன. பெரும்பான்மையின மீனவர்கள் உள்ளனர்.

ஆனால், இதனை சில ஊடகங்களும் சமூக செயற்பாட்டாளர்கள் அரசியல்வாதிகள் என்று தங்களைக் கூறிக்கொள்வோர் சிலரும் முண்டியடித்துக்கொண்டு வழமைபோல் அறிக்கை வெளியிட்டனர். அவ்வளவுதான்.

'உகந்தமலையில் நாங்கள் முருகன் சிலையொன்றை நிறுவ முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், அதே சூழலில் இப் புத்தர் சிலை எவ்வாறு நிறுவப்பட்டது? என்று மக்கள் கோருகின்றனரே? கதிர்காமம் போல் உகந்தையையும் மாற்ற திட்டமிட்ட சதி நடக்கிறதா? என்று மக்கள் கேட்கின்றனரே?'

இதற்கு என்ன சொல்கிறீர்கள்? என்று எமது ஊடகவியலாளர் கேட்டதற்கு அவர் பின்வருமாறு கூறினார்.

உகந்தமலையில் வள்ளியம்மன் மலையில் கடந்த காலத்தில் முருகன்



சிலை அமைப்பதற்கு முயற்சி செய்தபோது அதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடை செய்தது உண்மைதான். அதற்காக அதே மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டிருப்பதாக கூறுவது பொய். அபத்தம். கதிர்காமத்தைப் போல் உகந்தையையும் மாற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். - என்றார்.

# மூதூர் பிரதேச செயலக விளையாட்டு விழா

(ஜிப்ரான்)

மூதூர் பிரதேச செயலகத்தின் 49 ஆவது பிரதேச செயலக விளையாட்டு விழா நேற்று (சனிக்கிழமை) மிகவும் சிறப்பான முறையில் பிரதேச செயலாளர் எம். பீ. எம். முபாறக் தலைமையில் பொது மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.எல். சிறாஜ்ஜூம் விருந்தினர்களாக கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச சபை செயலாளரும் கலந்துகொண்டதுடன் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணியாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், நிருவாக கிராம உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளும் மற்றும் பொது மக்களும் கலந்துகொண்டிருந்தார்கள்.

மெய்வல்லுனர் போட்டி நிகழ்வுகள் மற்றும் மைதான நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான சான்றிதழ்களும், கிண்ணங்களும் விருந்தினர்களால் வழங்கிவைக்கப்பட்டன.






காலைக்கதிர் Kalaikkathir

## வரி விதிப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் லால் காந்த ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். இதனால் தான் அமைச்சரவை மறுசீரமைப்பு என்பதொன்று இல்லை என்று இவர்கள் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள் என்றார்.

## வெளிநாடுகளில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, இலங்கை ஆளும்தரப்பு, பிற நாடுகளிலிருந்து மருந்துகளை நேரடியாகப் பெறுவதற்கான வழிமுறையின்கீழ்ஒருமுறையானகுழுவை நியமித்து எதிர்கால நடவடிக்கைகளைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.

அந்த வழிமுறையின் கீழ், தேசிய கொள்முதல் அதிகாரசபையின் ஒப்புதலைப் பெற்று, அமைச்சரவையிடம் மீண்டும் சமர்ப்பிப்பதற்கான ஒரு துரிதப்படுத்தப்பட்ட திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இதன் மூலம் நாட்டின் மருந்து விநியோக வலையமைப்பை மீட்டெடுக்க முடியும்.

அதற்கமைய இந்த திட்டத்தை மேலும் செயல்படுத்த நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சு, வர்த்தகம், வணிகம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சு, வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் துறை ஆகிய அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் தலைமை வகிக்கின்றார். இக்குழு சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜசிங்க தலைமையில் கூடியது. அரசுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புமூலம்நாட்டுக்கானமருந்துகளைக் கொள்முதல் செய்யும் திட்டத்தை எவ்வாறு தொடங்குவது மற்றும் எதிர்காலத்தில் அதை எவ்வாறு செயல்படுத்தவேண்டும் என்பது குறித்துநீண்டகலந்துரையாடல்நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் தொடர்புடைய ஆரம்ப நடவடிக்கைகளை விரைவாக முடித்து, இந்நாட்டு மக்களுக்குத் தேவையான மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகளை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

## தொகுதிக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலின் பின்னர் ஆளுந்தரப்பினருடன் 4 சந்தர்ப்பங்களில் பேச்சு நடந்தது. அந்த பேச்சின்போது தொகுதிக்காக பணம் வழங்குவதற்கும், அரசியல்ரீதியில்பதவிகளை வழங்குவதற்கும்எம்மிடம்பேரம்பேசப்பட்டது. எவ்வாறிருப்பினும் பேச்சின் ஆரம்பம் முதல் இறுதி வரை மத்துகம பிரதேசசபை தலைவர் பதவியை மாத்திரமே நாம் கோரினோம்.

மத்துகமதொகுதியைஅழகுபடுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான வேலைத்திட்டங்கள் எம்மிடமுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகவே நாம் தலைவர் பதவியைக் கோரினோம். எவ்வாறிருப்பினும் ஆளும்தரப்பு எம்மிடம் பேரம் பேசியதே தவிர, எமது கோரிக்கைக்கு இணங்கவில்லை. எனவேதான் நாம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சு நடத்தி முன்னெடுத்து எமது கோரிக்கைகளை முன்வைத்தோம். தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரொருவர் எனது வீட்டுக்கு வருகை தந்து பேச்சு நடத்தினார். அது தொடர்பான சி.சி.டி.வி. காணொளி என்னிடமிருக்கிறது.

அதன் பின்னர் கொழும்பிலும் இரண்டு சுற்று பேச்சு நடந்தது. எமது தேவை பணம் அல்ல என்பதால் நாம் தேசிய மக்கள் சக்தி பரிந்துரைத்த சிறப்புரிமைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. தொகுதிக்கு 80 இலட்சம்ரூபாவரைவழங்குவதாகக்கூறினர். இப்போதும் அதனைவிடப் பெரும் தொகை தருவதாகக் கூறி அழைக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியால் எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாம்ஐக்கியமக்கள் சக்தியின் உறுப்பினர்களாகச்செயற்படுவோம். இன்னும் 3 ஆசனங்களைப் பெற்றால் 50 சதவீதம் எமக்கு கிடைக்கும். அதனைப் பெறுவதற்கானசெயற்பாடுகளைமுன்னெடுத்து வருகின்றோம். அதற்கமைய மத்துகம பிரதேச சபையில் நாம் ஆட்சியமைப்போம் என்றார்.

## உதய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தால்அவைதொடர்பில்குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடளிக்குமாறு பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 - 2019இல் கள்வர்களைக் கைது செய்வதாகக் கூறியே ரணில் - மைத்திரி ஆளும்தரப்பு ஆட்சியமைத்தது. இறுதியில் இரு தரப்பும் ராஜபக்சக்களுடன் இணைந்தே செயற்பட்டனர். ஆனால் நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கின்றோம். எதிர்க்கட்சிகள் எம்மை விமர்சித்தாலும் நாம் எமது பொறுப்புக்களை நிறைவேற்றுவோம்.

எமது ஆளும்தரப்பு எந்த வகையிலும் அரசியல் ரீதியாக நீதித்துறையில் தலையிடுவதில்லை. சட்டம்அதன்கடமையை செய்து கொண்டிருக்கிறது. தம் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்களே தற்போது அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர். ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படுகிறது.

விமல் வீரவன்ச கூறும் பட்டியலில் உள்ளவர்களும், அந்தப் பட்டியலுக்கு அப்பாற்பட்டவர்களும்இனிவரும்காலங்களில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். நீதிமன்றமே அதனைத்தீர்மானிக்கும். கம்மன்பிலஉள்ளிட்ட ஏனைய அனைவருக்கும் ஒரு விடயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். ரணில் விக்கிரமசிங்கவுடனிருந்தஹல்லொலுவவுக்கு என்ன நடந்து என்பது தெரியுமல்லவா?

இறுதியில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம்மேற்கொள்ளப்பட்டதாகக் கூறி நாடகமொன்றும் அரங்கேற்றப்பட்டது. வார்த்தை விளையாட்டுக்களால் ரணில் விக்கிரமசிங்கவும் விசாரணையை எதிர்கொண்டார். எனவே பழைய ஆளும்தரப்புக்களைப் போன்று இந்த ஆளும்தரப்புடன் விளையாட முற்பட வேண்டாம் என எச்சரிக்கின்றோம். அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் அவர்களே பொறுப்பு கூற வேண்டும்.

கம்மன்பில தொடர்பில் சட்டத்தரணி யொருவர் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தில் முறைப்பாடளித்திருக்கின்றார். ஊடகவியலாளர் மாநாடுகளில் கூறிக் கொண்டிருக்காமல் அவர்களும் சீ.ஐ.டி.யில் முறைப்பாடளித்தால் உரியநடவடிக்கைஎடுக்கப்படும். ஆளும்தரப்பு என்ற ரீதியில் நாம் ஒருபோதும் அந்த விசாரணைகளில் தலையிட மாட்டோம் என்றார்.

## காற்றால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டு உடல் அவயங்களை இழந்தவர்களுக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

## சபை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் உள்ளகப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணவேண்டும் என்று வர்த்தகத்துறை, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உப்புவிவகாரம்தற்போதுமுடிவடைந்துள்ள நிலையில் ஊடக அடக்குமுறை என்ற அரசியல் பரப்புரையை எதிர்கட்சிகள் கையில் எடுத்துள்ளன. ஊடகங்களைஅடக்கவேண்டிய அவசியம் கிடையாது. ஊடகங்கள் ஊடக நெறியாக்கத்துக்கு அமைய நாட்டு மக்களுக்கு உண்மையை குறிப்பிட்டால் எவருக்கும் எவ்வித பிரச்சினையும் கிடையாது.

ஒருசில ஊடகங்கள் திட்டமிட்ட வகையில் திரிபுப்படுத்தப்பட்ட வகையில் செய்திகளை வெளியிடுகின்றன. இதனால் ஒரு தரப்பினர் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள். நிகழ்நிலை காப்புச் சட்டம் வெகுவிரைவில் திருத்தம் செய்யப்படும். சமூக வலைத்தளங்களில் எவரும் எதனையும் குறிப்பிடலாம் என்ற நிலைமை காணப்படுகிறது. இதனை முறையாகக் கண்காணிக்கவேண்டும்.

உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலம் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளது. கொழும்பு மாநகர சபையின் மேயராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் விரெய் கெலி பல்தஸார் நாளை பதவியேற்பார். மாநகர சபைகளின் ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னர்கட்சியின்உள்ளகபிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்திடம்கேட்டுக்கொள்கிறோம்.

கடந்தகாலங்களில்அரசஅனுசரணையுடன் அரச நிதியை கொள்ளையடித்தவர்கள் இன்று சிறை செல்கிறார்கள். ஊழல்வாதிகளுக்கு எவ்வித பாதுகாப்பையும் ஆளும்தரப்பு வழங்காது. சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிறைச்சாலையின் பெரும்பாலான இடங்களை ஊழல்வாதிகள் வெகுவிரைவில் கைப்பற்றுவார்கள் என்றார்.

## சீரற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

மேலும் கொழும்பு மற்றும் நுவரெயாவில் மரம் முறிந்து விழுந்தமை மற்றும் மதில் இடிந்து விழுந்தமையால் 7 பேர் காயமடைந்துள்ளனர். அத்தோடு 1184 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை மற்றும் நோர்வூட் பிரதேசங்களில் மண் சரிவு அபாய எச்சரிக்கை மற்றும் கடும் காற்று காரணமாக 43 குடும்பங்களைச் சேர்ந்த 187 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கடும் காற்று

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் கடும் காற்றுடனான காலநிலை நிலவியது. இதனால் 10 பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல பகுதிகளில் குடியிருப்புக்கள், வாகனங்கள், கட்டங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. கொலன்னாவ, கெஸ்பேவ, ஹோமாகம, கோட்டை, பாதுக்க, திம்பிரிகஸ்யாய, மஹரகம, தெஹிவளை, கடுவலை மற்றும் கொழும்பு உள்ளிட்ட பிரதேச செயலகப்பிரிவுகளிலேயே இவ்வாறு பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

50 000 மின் தடைகள்

நேற்றுசனிக்கிழமைகாலை8மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 50,009 மின் தடைகள் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. பதிவான 14,031 மின் தடைகளில் மின்சாரசபையின் குழுக்கள் மீள் இணைப்பினை வழங்கியுள்ளன. ஏனையவற்றைசிசெய்வதற்கானநடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மின்சாரசபை தெரிவித்துள்ளது. மின் தடை ஏற்படும் பட்சத்தில் பாவனையாளர்கள் 1987 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வான்கதவுகள் திறப்பு

கடும்மழைகாரணமாகநீர்தேக்கங்களில் நீர் மட்டம் உயர்வடைவதால் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அம்பாந்தோட்டை - வெஹெரகல நீர் தேக்கத்தில்இருவான்கதவுகளும், களுத்துறை - குகுலேகல நீர் தேக்கத்தில் ஒரு வான்கதவும், நுவரெலியா-மேல்கொத்மலைநீர்தேக்கத்தில் ஒரு வான்கதவும் திறக்கப்பட்டுள்ளதாக நீர்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

காலி மாவட்டத்தில் பத்தேகம பிரதேச செயலகப்பிரிவு, கண்டியில் கங்க இஹக கோரள, கேகாலையில் அரநாயக்க, நுவரெலியாவில் அம்கமுவல, நோர்வூட் மற்றும் இரத்தினபுரியில் கிரிஎல்ல ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காலநிலை

நாட்டின்தென்மேற்கு பகுதிகளில்தற்போது நிலவும் மழையுடனான காலநிலை இன்று மாலையிலிருந்துபடிப்படியாகக்குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மிற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மத்தியமலைநாட்டின் மேற்குசரிவுப்பகுதிகளிலும்வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.




காலைக்கதிர்
Kalaikkathir

# தேசிய மக்கள் சக்தியின் உள்ளாட்சி யாழ். உறுப்பினர்கள் பதவியேற்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகியுள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் உள்ள தனியார் விருந்தினர் மண்டபம் ஒன்றில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான, கருணைநாதன் இளங்குமரன், சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கண்டல் தாவரங்கள் நடுகை

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயல பிரிவின் சாம்பல் தீவு களப்பு பகுதியில் கண்டல் தாவரங்கள் நடப்பட்டன.

சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகம் சூழவயசல ஊடறடி இணைந்து சாம்பல்தீவு களப்பு பகுதியில் நேற்று (சனிக்கிழமை) கண்டல் தாவர நடுகை இடம் பெற்றது.

இதில் குறித்த அரசதிணைக்களங்களங்கள் மற்றும் றொட்டரி கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# மரம் முறிந்து விழுந்ததில் பஸ்ஸுக்குப் பெரும் சேதம்

(கிஷாந்தன்)

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ் மீது மரம் விழுந்ததில் பஸ்ஸுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன்-மஸ்கெலியா பிரதான வீதியில் நிவ்வெளி பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்காக பிரதான வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் ஒன்றின் மீது மரம் விழுந்ததால், மரம் வெட்டப்படும் வரை வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணி முதல் இரவு 8 மணி வரை வீதியில் போக்குவரத்து முற்றிலுமாகத் தடைப்பட்டிருந்தது.

மரம் முறிந்த நேரத்தில் பஸ்ஸில் யாரும் இல்லை என்றும், மரம் முறிந்து விழுந்ததால் பஸ் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியாவின் குரலுக்கான தேடல் போட்டிகள் ஆரம்பம்

வவுனியாப் பிரதேசசெயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வவுனியா இசை ஆர்வலர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாக 'வவுனியாவின் குரல் 2025'என்ற நிகழ்வை நடத்தியிருந்தது.

அதற்கான முதல்சுற்றுப்போட்டிகள் கடந்தவாரம் ஆரம்பித்த நிலையில் வெள்ளிக்கிழீமை இறுதிப்போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இருபிரிவுகளாகஇடம்பெற்றஇப்போட்டியில்18வயதிற்குட்பட்ட பிரிவில் முதலாம் இடத்தை சதீசன் சுருதியும்,இரண்டாவது இடத்தை சந்திரகுமார் ரொசானியும், மூன்றாம் இடத்தை யோகநாதன் கிர்ஸ்சாத் ஆகியோரும் பெற்றுக்கொண்டிருந்தனர்.

மேற்பிரிவில் முதலாம் இடத்தை மகேந்திரன் சிவசக்தி, இரண்டாம் இடத்தை சாந்தரூபன் கலாரஜினி, மூன்றாம் இடத்தை அல்போண்ஸ் மெலிஸ்ரன், செபஸ்ரியான் வினோஜன் ஆகிய இருவர் பெற்றுக்கொண்டனர்.

போட்டியில் வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கு 2025 ஆம்ஆண்டு நடாத்தப்படுகின்ற பிரதேசகலாசார விழாவில் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்படவுள்ளன.

இறுதிப்போட்டி நிகழ்வில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன், உதவி பிரதேச செயலாளர் பு.உமாநந்தினி, கலாசாரஉத்தியோகத்தர் க.அபிராமி,

அபிவிருத்திஉத்தியோகத்தர்சி.துஜான்உட்படஉத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். 100




# சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்புப் பிரச்சார நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்பு பிரச்சார நடவடிக்கையும் கொடி விற்பனையும் நேற்று (சனிக்கிழமை) வைபவ ரீதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் அவர்களினால் சாய்ந்தமருது – 12 ஆம் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் தொழிலதிபர் எம்.யூ.நியாஸ், தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், நிதி உதவியாளர் ஏ.எம்.றியாஸ் உள்ளிட்ட அதிதிகள், சமுர்த்தி அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் எதிர்ப்பு பிரசாரம் மற்றும் கொடி விற்பனை நிகழ்வுகள் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட சகல கிராம சேவக பிரிவுகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டம் மே 31 முதல் ஜுன் 17 வரை இடம்பெறவுள்ளது.

இதன் அங்கமாக போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு எதிர்வரும் ஜுன் 04 ஆம் திகதி சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இதில் சகல பெண்களும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் இதன் போது அழைப்பு விடுத்தார்.



# அரச நிறுவனங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன

## அமைச்சர் சந்திரசேகரன் சுட்டிக்காட்டு




யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், யாழ்ப்பாண மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையின் கீழ் வடமாகாண ஆளுநரும், ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான நாகலிங்கம் வேதநாயகத்தின் பங்கேற்புடன் நடைபெற்றது.

மேற்படி, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் ஊடகமாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதியினூடாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும், துறைரீதியான முன்னேற்ற மீளாய்வில் சேவைத்துறை சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றின் தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

அத்துடன் விவசாயம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைசார் விடயங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய ஆளுநர், நடப்பு ஆண்டின் மே மாதமும் நிறைவுகின்றது. மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாகவும் - வினைத்திறனாகவும் செலவு செய்யவேண்டும். அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மாகாண ஆளுநர்களை அண்மையில் சந்தித்திருந்தார். இதன்போது மாகாணங்களுக்கு கடந்த காலத்தைவிட 3 மடங்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளமையைச் சுட்டிக்காட்டியதுடன் ஒரு சதம் நிதியையும் திருப்பி அனுப்பாமல் சரியாகச் செலவு செய்யவேண்டும் என்றும் கோரினார். எனவே இதனைச் செயற்படுத்த உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பைக் கோருகின்றேன். - என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாகவும் வினைத்திறனாகவும் செலவு செய்ய அதிகாரிகள் ஒத்துழைக்கவேண்டும். எதிர்வரும் ஆண்டுகளில் அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கின்றார். மேலும், சில அரச நிறுவனங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து தொடர்ச்சியாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன, என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.றஜீவன், எஸ்.சிறீபவானந்தராஜா, சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இ.அர்ச்சுனா ஆகியோர் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# விசேட தேவையுடையோரின் வாக்குரிமைகளை மாகாணசபை தேர்லுக்குமுன் உறுதிப்படுத்துக

## பிரதேசசபை உறுப்பினர் அனுசியா கோரிக்கை

(சுபேசன்)

எதிர்வருகின்ற மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக விசேட தேவையுடையோரின் வாக்குரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் திருமதி ஜெ.அனுசியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றஊராட்சிமுற்றக்கலந்துரையாடலின் போதே அவர் மேற்படி கோரிக்கையை மாவட்ட அரசாங்க அதிபரிடம் விடுத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

அண்மையில் இடம்பெற்ற மூன்று தேர்தல்களிலும் யாழ்.மாவட்டத்தில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிக்க பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

யாழில் இயலாமை உடைய நபர்களில் 25சதவிகிதமானவர்களே இயலாமை கொண்ட நபர்களுக்கான அடையாள அட்டை வைத்துள்ளனர்.

கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சில வாக்களிப்பு நிலையங்களில் சக்கரநாற்காலி செல்வதற்கான சாய்தளம் இருக்கவில்லை. இதனால் இயலாமை கொண்ட நபர்கள் வாக்களிக்காமல் திரும்பிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

விசேட தேவையுடையவர்களுக்குதபால்மூல வாக்களிப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இயலாமை கொண்ட நபர்கள் வாக்களிக்கச்செல்லும்போதுசிலசந்தர்ப்பங்களில் அங்குள்ள அதிகாரிகளால் வாக்குரிமை மறுக்கப்படுகின்றது.

எனவே எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக இவ்வாறான குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு இயலாமை கொண்ட நபர்களுக்கான வாக்குரிமை உறுதி செய்யப்பட வேண்டும். - என மேலும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

# கற்பிட்டி பெரியகுடியிருப்பு கிராம அபிவிருத்தி குறித்துக் கலந்தாய்வு

(சியாஜ்)





அரசின் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தை திட்டமிடுவது தொடர்பான கலந்துரையாடல் கற்பிட்டி பெரிய குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் அதன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.பீ சாமிலா தலைமையில் வாழைத்தோட்டம் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் சமன் குமார, கிராம உத்தியோகத்தர் எம்.றியால், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் .எச்.எம் றிம்ஸான், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் றுவான் மற்றும் கிராமத்தின் தொண்டர் நிறுவனங்கள்,சமூக செயற்பாட்டாளர்கள், சமூகத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போதுகற்பிட்டிபெரியகுடியிருப்பு கிராமத்தில்எதிர்வரும்ஐந்துவருடங்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள்தொடர்பானகலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு அதற்கான திட்டங்களும் வரையப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.06.2025இல் வெளியிடப்பெற்றது